உ

பதிவு எண்—M 6720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

553

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

18 MAY 1954

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், [illegible]ப்பாக்கம்; செய, சித்திரை; 23—4—54 தளிர்-27

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

அடக்கத்தின் அடையாளம்

நாக்கின் நலத்தைப் பற்றிச் சொல்லுகின்றபோது, ஆசிரியர் திருவள்ளுவர்க்கு ஒரு தனித் துணிவும் இன்பமும் பிறக்கின்றது! வாக்கின் சிறப்பு அப்படிப்பட்டது என்று தெரிகிறது.

அறிவும் அன்பு முதலிய குணங்களுமெல்லாம் புலன் நுகர்வுக்கு அப்பாற் பட்டவை; அறிவை அறிவாலும் குணங்களைக் குணங்களாலுந்தான் நுகரமுடியும். அவையெல்லாம் பண்டங்களுக்கு வேறான உயிரின் தெய்வத்தின் இயல்புகள்! அறிவு, உயிரின் இயல்பு; குணம், தெய்வத்தின் இயல்பு!

பண்டங்களின் இயல்புகளைத்தான் புலன்கள் நுகரமுடியும். ஆகவே, அண்டம் என்னும் உலகின் பொருள்களை நுகர்வதற்காகவே, பிண்டம் என்னும் இவ்வுடம்பின் புலன்கள் உள்ளன.

புலன்கள் ஐந்து உண்டு அவற்றில், காதுதான் உயர்ந்தது; ஓசையை அது நுகரமுடியும். ஓசை இருவகைப் படும். ஒன்று, பொது ஓசை; மற்றொன்று மொழியொலி!

உடம்பிலிருந்து தோன்றும் மொழியொலி நாவினால் வெளிப்படுகின்றது; அது, வியப்பான தன்மை அமைந்தது; அழுக்கில்லாதது!

ஒளிக்கு எதிர்ப் பொருளாய் அழுக்குக்கு இடமாய் இருள் இருப்பதுபோல, ஒலிக்கு எதிர்ப் பொருள் இல்லை; வாக்கு என்பது அவ்வளவு தூய ஒலி நிலை!

ஆகவே, 'நாநலம் யாநலத்துள்ளதூஉம் அன்று' 'யா காவாராயினும் நா காக்க' எனத் திருவள்ளுவர் நாநலத்துக்குச் சமமாக உலகத்தில் யாதுமில்லை என்று கூறவே துணிந்து முந்துகின்றார்!

வாக்கு என்னும் இத்தகைய அரிய நற்பேற்றை மக்கள் பெற்றிருந்தும், அதனை இழுக்குப் படாமல் காத்துக்கொள்ளப் பலர் முயல்வதில்லை; இறனறிந்து சொல்லிச் சொல்லிய வண்ணம் நடந்து கொள்ளுதலாகிய நாவடக்கமே, மேலான அடக்கமென்று ஆசிரியர் தெளிவு செய்கின்றார். இந்த அடக்கம் ஏனை எல்லா அடக்கங்களின் விளைவாக உண்டாவது! வாழ்க்கைக்கு இது எவ்வளவு பாதுகாப்பு!

யாகாவா ராயினும் நாகாக்க
காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
பட்டு.

யா காவாராயினும் — எவற்றைக் காக்கமாட்டாராயினும், நா காக்க — நாக்கினைக் காத்து வருக; காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு — நாக்கினைக் காக்காவிட்டால் சொற் குற்றத்தில் அகப்பட்டு வருந்துவர்.

சொற் குற்றத்துக்குமேல் இடர்ப்பாடு தருவது வேறில்லை என்று தீர்த்துத் தெளிவிக்கும் பொருட்டு, 'யா காவாராயினும்' என, முழுமைப் பொருளில் வரும் 'யா' வினாவை வைத்துக் கூறினார். யா — எத்தகையவற்றை; எத்தகைய இடர்தருவவற்றையும் என்க.

நா என்பதைச் சுவைப் புலனுகவுங் கொள்ள இடமுண்டாதலின் அதனை விலக்கி, வாக்குக் கருவியாகக் கொள்ளும் பொருட்டுச் சொல்லிழுக்குப் படுதலை நினைவூட்டினார்.

காத்தல், சொற்பழுது நோவண்ணம் உரைபாடுதல்.

சொல்லிழுக்குப் படுதலில் முதன்மையானது, சொல்லிய வண்ணம் நடவாமையாதலின், 'காவாக்கால் சோகாப்பர்' என்றார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	செய, சித்திரை,	தளிர்
6	23-4-54 வெள்ளி.	27

திருவாசகமும் தெய்வந் தெளிவும்

தேய்வந் தேளிதற் சிறப்பு:

"தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்" என்பது இளங்கோவடிகள் திருமொழி. "ஒன்றென் றிரு தெய்வம் உண்டென் றிரு" என்பது பட்டினத்தார் அறிவுரை. "நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போர்க்கு இனன் ஆகிலியர்" என்பது முதுகண்ணன் சாத்தனார் முதுமொழிக் காஞ்சி. "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்" என்பது திருவள்ளுவர் தமிழ் மறை. இங்ஙனம் வரும் சான்றோர் அருளுரைகள் பலவற்றாலும் தெய்வந் தெளிவின் சிறப்பும் இன்றியமையாமையும் யாவர்க்கும் புலனாகும். மக்களுள் தக்கோர்களுக்கெல்லாம் அமைந்திருக்க வேண்டிய இன்றியமையாத சிறந்த பண்புகள் பலவற்றில் "குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை" எனத் தெய்வங்கொள்கையாகிய பண்பும் ஒன்றாகப் பெரியோர்களால் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றிருத்தல் அறியற்பாலது. எனவே, ஆத்தமானார் அயலவர் கூடி நாத்திகம் பேசி நாத்தழும்பேறினராயினும், நம்மனோர் அனைவரும் அவர் திறம் சாராது "தெய்வம் என்பதோர் சித்தம்" உடையவராக வாழ்க்கை நடத்தும் கடப்பாடுடையமாவோம்!

தெய்வம் தெளிவிக்கும் சில சிந்தனைகள்:

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் சிலபல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் இறையுணர்வை எழுப்பியே விடுகின்றன. முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்தொழிந்து போதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. பெருத்த துன்பங்களும் நோய்களும் தொல்லைகளும் நேருங்கால் எல்லாம் மனிதன் தன்னுடைய சிறுமையினை உணரவேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கியாண்டு யாவும் தன்னாலேயே நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்கும் கயவனும், தன்கண் நிகழும் காம வெகுளி மயக்கங்களும் பிறவும் தன்னை ஆட்டிப் புடைத்து அலைப்பத் தான் அவற்றிற்கு அடங்கி நின்று, அந்தோ வினையே என்று அழுங்கித் துன்பம் உழக்கின்றான். தன்னுடைய அறிவும் முயற்சியும் பிறவும் ஒரு வரையறைக்குட்பட்டன என்று உணர்கின்றபோது, வரையறைக்குட் படாத அறிவும் ஆற்றலும் இன்பமும் உடைய பொருளின் துணையை அடைய மனிதன் அங்கலாய்க்கின்றான். பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அமைந்திருந்து கருதிக் காணுந்தோறும், இவற்றிற்கெல்லாம் காரணமாக இலங்கும் ஒரு முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை நாம் உடன்படவேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக உளது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோனும், இந்நாளில் அவற்றினை வெறுத்தொதுக்கி, இத்தகையதென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரின்பத்தினை விழைந்து நின்று உள்ளம் அமைதியற்று ஏக்கற்று அலமருகின்றான். நமக்குத் துணையென நம்மாற் கருதப் பெறுபவர்கள் பலரும் நம்மைக் கைவிட நேர்ந்த நிலையில் "காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" எனக் கண்ணகியார் அரற்றியதே போல ஏதோ ஒரு பெரும் பொருளின் துணை வேண்டி, வானை நோக்கியே வருந்திக் கதறி அலறும் நிலையிலுள்ளோம். நாம் செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை, சிறு விறகால் தீ மூட்டியே செல்லா நிற்பர். இவைகளையெல்லாம் பகுத்தறிந்

தாராய வல்லார்க்குத் தெய்வந் தெளிவும் கொள்கையும் உண்டாதல் தேற்றம்!

எத்தகையதாயினும் ஓர் அரசியல் அமைப்பும், அவ்வரசியல் அமைப்பிற்குரிய தலைவனும் இல்லாமல், எந் நாடும் மக்களும் நலமுறத் திகழ்தல் இல்லை. ஒரு நாட்டிற்கு அரசியலும் அரசியற் றலைவனும் வேண்டியிருத்தல் போலவே, இப் பெரிய உலகுக்கும் ஒழுங்கானதோர் அமைப்பும், அவ்வமைப்பினை வகுத்து நடத்தும் இறைவனும் உளனாதல் வேண்டும் என்பதில் ஐயமில்லை காணப்பட்ட நம்மனோர் உடலின் இயக்கத்திற்கும் இவ்வுலகின் இயக்கத்திற்கும் காணப்படாத இறைவன் ஒருவன் காரணமாவான்!

காணப்படுகின்ற இவ்வுலகம் எப்போது தோன்றியது? எப்படித் தோன்றியது? எற்றிற்குத் தோன்றியது? எதனினின்றும் தோன்றியது? இவ்வுலகம் உள்பொருளா? இல் பொருளா? உள் பொருளாயின் தோன்ற வேண்டுவது என்னை? இல் பொருளாயின் உளதாமாறு யாங்ஙனம்? தோன்றியன யாவும் அழிந்துவிடுதலின், இவ்வுலகமும் அழிந்துபடுமோ? அழிந்துபடும் எனின், ஏன் அழிதல் வேண்டும்? அழிந்தால் மீண்டும் தோன்றுமா? தோன்றுங்காறும் யாண்டு எவ்வாறு இருக்கும்? என்று இவ்வுலகத்தைப் பற்றியும்—இவ்வுலகில் வாழும் நாம் யார்? உடலா? உயிரா? இவ்வுடலும் உயிரும் ஒன்றினொன்று முரணி மறுதலைப் பண்புகள் உடையனவாக இருப்ப, இவை இரண்டும் தம்முள் இயைந்தமை யாங்ஙனம்? இயைந்தமை எற்றிற்கு? எற்றைக்கு? இயைவித்தவன் யாவன்? இயைந்து நிற்கும் இவையிரண்டும் இடை நடுவே பிரிந்து இறந்துபோவதென்னை? உடலோடே உயிரும் அழிந்தொழிகின்றதோ? அழிந்திலதேல் பின்னர் எங்கு எவ்வாறு உளது? என்று உயிரியல்புகள் பற்றியும்—உலகினையும் நம்மோரனைய உயிர்களையும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடுவது எது? இயற்கையே எனின், தோன்றலும் அழிதலும் வேறுபாடாகலின் வேறுபாடாதல் இயற்கை எனப்படாது; வேறுபடுதலே இயற்கை எனப்படும் எனின், வேறுபடுதலாகிய விகாரத்தின் வேறாக இயற்கை என்பது ஒன்றில்லை என முடியும்! இயற்கை செயற்கைப்படும் எனின், செய்வோனை இன்றிச் செயல் நிகழுமாறு யாங்ஙனம்? செயல் நிகழ்ச்சிகளெல்லாம் அறிவினாலேயே யன்றோ நிகழ்கின்றன? இவ்வுலகியக்கமும் அறிவினாலன்றோ நிகழ்தல் வேண்டும்? அறிவு என்பது ஒரு பண்பன்றோ? பண்பெல்லாம் ஒரு பண்பியை யன்றோ சார்ந்திருக்கும்? அவ்வறிவுப் பொருள் யாது? அப்பொருள் உயர்திணையோ அஃறிணையோ? ஆணோ பெண்ணோ அலியோ? அருவோ உருவோ அருவுருவோ? அப் பொருள் இவ்வுலகினைத் தன் பொருட்டுப் படைத்ததோ? பிறர்பொருட்டுப் படைத்ததோ? வீணே படைத்ததோ? என்று கடவுளைப் பற்றியும் எழும் பல திற ஐயங்களின் நீங்கித் தெளிந்துகொள்ளும் விருப்பம் மிக்குச் சிந்தனைகள் செய்ய வல்ல நல்லார்க்குத் தெய்வந் தெளிவு நிகழ்தல் ஒருதலை என்க.

இம்மட்டோ! உலகில் நாடோறும் பகலிரவுகள் மாறி மாறி வருகின்றன! ஆண்டுதோறும் பருவகாலங்கள் வெவ்வேறாகத் தோன்றுகின்றன! வானத்தில் எண்ணிறந்த பலகோடி விண்மீன்களும் கோள்களும் தத்தம் நெறி திறம்பாமல் இயங்கி வருகின்றன! மரம் செடி கொடி புல் பூடு முதலியன ஆங்காங்குள்ள தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும் நூறு நூறாயிரம் இயல்புகளும் உடையனவாய் அமைந்து காணப்படுகின்றன. எறும்பு முதல் யானை ஈறாக உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதத்து உயிர்த் தொகுதிகள் பலவகைப் பண்பும் பழக்கமும் உடையனவாக உலகின்கண் தோன்றி ஆங்காங்கு வாழ்ந்து மறைந்து செல்கின்றன.

மிகப் பெரியதாய்ப் பரந்து விளங்கும் இந் நிலவுலகினையும் இதனைச் சூழ்ந்து மும்மடங்கு பெரிதாய்த் திகழும் மாபெருங் கடலினையும், அக் கடலைப் போன்று பல மடங்கு பெரிதாய் விரிந்து திகழ்ந்து விண்மீன்கள் ஒளிரும் வானத்தினையும், அவ் வானத்தை அளாவி உயர்ந்தோங்கி நிற்கும் இமயமும் பொதியமும் போன்ற மலைகளையும், "மாயா இயந்திர தனு" என மெய்கண்ட தேவர் கூறுதற்கு ஏற்ப வியத்தகு நுண்ணிய அரிய எண்ணில் பல் பொறிகளின் தொகுப்பென இயைந்து விளங்கும் நம்மனோர் உடலமைப்பின் அருமைப்பாடுகளையும், இத்துணைப் பெரிய இவ்வுடல் ஒரு காலத்தில் மிகச் சிறியதாய் நெருக்கமுற்றிருக்கும் தாயின் கருப் பையின்கண் பத்துத் திங்கள் காறும் தங்கி வாழ்ந்து வளர்ச்சியுற்ற வரலாறுகளையும், இன்னோரன்ன பலவற்றையும் எண்ணிப் பார்க்குங்கால்.

"கடற்காட்சி, வான்காட்சி,
கார்வரைசூழ் காட்சி,
உடற்காட்சி, அவ்வுடல்
ஒண்சூல்—படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண்
ஓர் இறைவன் உண்டென்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்"

என்றாற் போல, மக்களாயினார்க் கெல்லாம் அவர் எத்தகையராயினும் இயல்பாகக் கடவுணுணர்ச்சி எழப் பெறுதல் உறுதி. அங்ஙனம் எழப் பெற்றவர்கள் 'என்னிலும் இனியான் ஒருவன் உளன்' எனக் கருதியறிந்து கொள்வதோடு, இவ் இனியான் 'உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந்து அறிதலையும், உள்ளத்தேஇருந்துஉயிர்ப்புளேவந்து கள்ளத்தே நிற்றலையும் கண்டு கொண்டு மகிழ்ந் தின்புறுவர்!

இங்ஙனம் இறைவன் ஒருவன் உண்மையினை அருளினால் அகமத்தே அறியலாம், அளவினாலும் தெருளலாம். எனினும் சான்றோர்களின் ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக்கண்டு வாழ்தலே நடக்கு மிகப் பெரிதும் எளிய தொன்றாகும். ஆதலின், தொன்று தொட்டு வாழைபடி வாழை என வந்துள்ள சான்றோர்கள் பலரும் ஒவ்வோராற்றால் நம்மனோர்க்குத் தெய்வ முண்மை தெளிவிக்க முயன்றுள்ளனர். ஆசிரியர் தொல்காப்பியனார் "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே"எனக் காஞ்சித் திணையால் உலக நிலையாமை கூறித் தெய்வம் தெளிவித்துள்ளார். திருவள்ளுவர் 'எழுத்தெல்லாம் அகர முதல' அதுபோல உலகு ஆதி பகவன் முதற்று எனத் தெய்வ முண்மை தேற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதனை 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' எனக் கூறுகின்றார். 'ஊழ்வினை உருத்துவந் தூட்டும்' என்று இளங்கோவடிகள் இயம்புகின்றார். "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியில் தெளிந்தனம்" எனக் கணியன்பூங்குன்றனார் கட்டுரைக்கின்றார். மெய்கண்டதேவர், காணப்பட்ட இவ்வுலகம் அவன் அவள் அது என்னும் பாகுபாடுடையதாயும், பலவேறு வகைத் தாய்ச் சடமாயும் சுட்டியறியப் படுவதாயும் இருத்தலின், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை யுடையதாய்ச் செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை என்னும் அறிவியல் முடிபிற்கு அமையக் கடவுள்ஒருவனை வேண்டி நிற்கும் எனவும், அக்கடவுள் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டும் எனவும் பிறவாறும் தருக்க நெறி பிறழாது பொருத்த முறக் காட்டுகின்றார். இராமலிங்க அடிகள் "நில்லாத காற்றை நிலையாக் கடத் தடைத்துச் செல்லாது வைக்கின்ற சித்தனெவன்?" என்பார். "தோற் பாரம் நாலாட் சுமையாகும் சீவன் ஒன்றிங்கு ஆர்ப்பால் எடுத்தது எவராலே பராபரமே" என்பர் தாயுமானார்.

இங்ஙனமே, நம் மாணிக்க வாசகப் பெருமானும் தெய்வ முண்மை தெளிவிக்கும் தமது ஞானச் செய்தியாகத் திருவாசகத்தின்கண் பலப்பல கூறியருளுகின்றார். "அருக்கனில் சோதி அமைத்தோன்—திருத்தகும் மதியில் தண்மை வைத்தோன்-பொய் தீர் வானிற் கலப்பு வைத்தோன்-மேதகு காலின் ஊக்கம் கண்டோன்—நிழல் திகழ் நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்-வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்-என்றென்று எனைப் பலகோடி எனைப்பல பிறவும் அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன்" இறைவனே என்று நமக்கு விளக்கி, அவ் விறைவனைப் "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி! நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி! தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி! வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி! வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி! எனத் திருவாசகம் போற்றிப் புகழ்கின்றது.

இறைவன் நம்மனோர்க்குச் செய்யும் பல திற அருளுதவிகளையும் போற்றித் திருவகவ லின்கண் அழகுற எடுத்துக் கூறித் தெய்வந் தெளிவிக்கின்றார். அப் பகுதியின்கண் நாம் நம தாயின் கருப்பையில் பத்துத் திங்கள்காறும் தங்கிக் கிடங்குங்கால் ஒவ்வொரு திங்களிலும் முறை முறையே நமக்கு ஏற்பட இருக்கும் இடுக்கண்களை யெல்லாம் வகுத்துரைத் தருளுமாற்றால் தெய்வந் தெளிவித் திருக்கும் சிறப்பு, திருவாசகத்தின் பெருமையினை மலையிலக்கென விளங்கா நிற்கின்றது.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

யானை முதலா
எறும்பு ஈறாய
ஊனமில் யோனியின் உள்வினை
பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா
உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற்
பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற்
பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற்
பிழைத்தும்
மும்மதிதன்னுள் அம்மதம்
பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள்
பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல்
பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர்
பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி
பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும்
பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும்
பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு
தான்படும்
தக்க சாகரத் துயரிடைப்
பிழைத்தும்......"

என வரும் திருவாசகப் பகுதி, கருவளர்ச்சி கூறும் முறையினால் இறைவனுண்மை நிறுவித் தெளிவு செய்யுந் திறம் பெரிது மிகப் பாராட்டி வியக்கற்பாலது. இஞ்ஞான்றைக் கருவளர்ச்சி நூல்கள் (Obstetrics) விரிவாக ஆராய்ந்து கூறும் கருத்துக்களையெல்லாம் கி. பி மூன்றாம் நூற்றாண்டினர் எனக் கருதப்படும் வாதவூரடிகள் திட்பநுட்பம் செறியச் சுருங்கக் கூறி விளங்க வைத்திருப்பது, நினைத்தொறும் வியப்பினை விளைக்க வல்லதாகும். இங்ஙனம் இறைவன் உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்து உளம் மன்னிக் கருத்திருத்திக் கருணையினால் நம்மனோரை ஆட்கொண்டு காத்தருளும் தன்மையினைத் திருவாசகம் சிறப்புற விளக்கும் மாட்சியினையே பின்னைச் சான்றோர்கள் பலரும் பாராட்டிமகிழ்ந்தனர்என்பதனைத்

"தாயர்கர்ப்பத் தூடனமும்
தண்ணீரும் தந்தருளும்
நேயவுனை யாரே
நினையார் பராபரமே"

என வரும் தாயுமானவர் கண்ணியால் எண்ணியுணரலாம். "காரிட்ட ஆணவக் கருவறையில்" என வரும் அவரது பாடலும் ஈண்டுக் கருதற்பாலது.

இங்ஙனம் நமக்குத் தெய்வமுண்மை தெளிவிக்கும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை, நாம் இடையறாது ஓதி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, தெய்வத் திருவருள் பெற்றுய்வோமாக!

—புலவர் முருகவேள். B. O. L.

(6ம்- பக்கத் தொடர்ச்சி)

"நீங்கள் போங்கள். நான் விடிந்தவுடன் எங்காவது போய் விடுகிறேன்" என்றான்.

"நான் எங்கப்பா போவது? அனாதைக்கு அனாதைதான் ஆதரவு வா!" என்றார்.

வியப்புடன் சங்கரன், "ஆ! நீங்களும் அனாதைகளா" என்றான்.

"தாத்தா தூக்கம் வருது" என்றாள் சிறுமி. பாலத்தின் மீதிருந்து சட்டென்று இறங்கிய சங்கரன் அச் சிறுமியைத் தூக்கி வைத்துக்கொண்டு "நீயும் அனாதைதானா"? என்றான், அவள் முகத்தைத் தடவிக்கொண்டே. அவன் செயல் கண்டு பெரியவர் நெஞ்சுருகித் தன் கண்களைத் துடைத்தார்.

"வாருங்கள் போகலாம்" என்று சிறுமியைத் தூக்கிக் கொண்டு நடந்தான் சங்கரன். பெரியவர் பின் தொடர்ந்தார்.

துயர் தாளாத சந்திரன் கருந் திரையால் முகத்தை மூடிக் கொண்டான் சில விநாடி.

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

* அனாதைகள் *

(நாராயணசாமி)

(முன் தொடர்ச்சி)

தன்போக்கே பிறர் போக்காக எண்ணும் எத்தனை பேர் அறியா மக்களை அல்லலில் ஈடுபடுத்துகின்றனர். அண்டங்களின் ஒழுங்கு பட்ட இயக்கத் தன்மை வாழ்க்கைப் பாடமாக அமைய எத்தனைக் காலஞ் செல்லுமோ? நோக்கமற்று இயங்கும் ஏழை மக்களின் வாழ்க்கையைச் சிதைத்துச் சின்னபின்னமாக்கி, எப்படி யெப்படி யெல்லாமோ அவர்களை ஆட்டுவித்துக்கொண்டிருக்கும் ஆட்சி முறையின் போக்கு எத்தனை காலத்துக்கு மனித சமுதாயத்தைக் கட்டி மேய்க்குமோ? நம் வாழ்க்கையை நாமே ஒழுங்குபாடு செய்து கொள்ளும் நிலையை என்று அடையப்போகிறோமோ, அன்றுதான் வாழ்க்கையில் ஆனந்தமும் வளமும் இருக்கும்.

சமுதாயத்துக்கு, நாட்டுக்கு, ஊருக்கு, உலகுக்கு ‘அர்ப்பணம் செய்யுங்கள் வாழ்க்கையை’ என்று அறை கூவி, அவர்களின் சுக சௌகரியத்தைப் பறிப்பதோடல்லாமல் அவர்கள் சுக சௌகரியத்தை ஒரு சிலர் அனுபவிக்கவிட்டு வேடிக்கை பார்க்கும் எந்த அமைப்பும் மனித சமுதாயத்துக்குப் பூரண நன்மை செய்ததாகாது. இன்று அமைப்பை மாற்றலாம். ஏட்டளவில் விதியை மாற்றலாம். பேச்சளவில்எண்ணத்தை மாற்றலாம். சிந்திக்க மறுக்கலாம். என்னவேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அடிப்படையை மாற்றி, அங்கெல்லாம் பொது நன்மைக்கான வாழ்க்கையை நிலை நிறுத்தி இன்றைய உலகையே மாற்றியமைப்பதென்னவோ இயலாத காரியம்.

சங்கரன் எவ்வளவு நேரம் தன்னை மறந்து இருந்தானோ தெரியவில்லை. மீண்டும் அவன் நினைவுபெற்றபோது, இரண்டு உருவங்கள் தன்னை நோக்கி வருவது தெரிந்தது. சந்திரனின் பூரண ஒளி அவர்களின் உருவை நன்றாகக் காட்டிவிட்டது. எங்கும் அமைதி குடிகொண்டிருந்ததால் நேரம் கடந்துவிட்டது என்பதை அறியலானான். இப்பொழுது அவ்விரு உருவங்களும் நெருங்கின. ஒரு பெரியவர்; கையில் ஊன்றுகோல்; கந்தல் உடை; அவர் பக்கத்தில் ஒரு சிறுமி; இடையில் கிழிந்த உடை; மேலே ஒன்றுமில்லை; கையால் உடலைப் பொத்திக்கொண்டிருந்தாள். சங்கரன் அவர்களை உற்றுநோக்கினான். வந்தவர் சங்கரனைப் பன்முறை நன்றாக உற்றுநோக்கிவிட்டு ‘யாரப்பா நீ’ என்றார். அவன் பேசாமல் இருந்தான். சிறுமி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். மீண்டும் அப் பெரியவர் வினவவும், ‘நான் யாருமற்ற அனாதை’ என்று கூறினான் சங்கரன். அவன் குரல் கம்மிற்று. இந்த வாக்கியமே அவன் மனத்துயரைக் காட்டும் சாதனமாக அமைந்தது.

“அனாதைகளின் வாழ்வே ஒரு அலாதிதானப்பா. அச்சமும், கூச்சமும் நீங்கி உலகையே தன் வீடாக்கிக்கொண்டு எந்த நேரத்திலும், எல்லாவிடத்திலும் சஞ்சரிக்க உரிமை பெற்ற மனிதராக அனாதைகளாகிய நாம் தான் இருக்கிறோம். நிலையற்ற சுகத்தை அனுபவிக்கும் மாளிகை வாசிகளை விட, வாழ்நாள் வரை நித்திய ஆனந்தக் காட்சிகளைக் கண்டு நாம்தான் களிப்பெய்திக் காலம் கழிக்கிறோம்” என்றார் பெரியவர். அவர் பேச்சில் கனிவும், உறுதியும் இருந்தன. அது சங்கரனின் உள்ளத்தைக் கிண்டி, துயரைப் பொங்க வைத்தது. நெஞ்சில் முட்டிக் கலங்கும் துயர வெள்ளத்தை, வரை நீராய்ப் பொங்கவைத்தது. சற்று நேரம் வரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். “எந்த ஊரப்பா உனக்கு” என்றார் பெரியவர்.

பெரியவர் நகைத்தார். உண்மைதானப்பா, உபயோகமற்ற விஷயங்களுக்காகவும் உறுதியற்ற சில சௌகரியங்களுக்காகவும் தாம் அனுபவிப்பதாக எண்ணிக்கொண்டு அலைச்சல் வாழ்க்கையில் இன்பங் காணும் மனிதர்கள் வாழும் ஊர் நம்ஊராக இல்லாமல், ஒன்றுமறியா மூடர்கள் ஏழை மக்கள் வாழும் ஊர் நமதாக இருக்கட்டும். காலை முதல் மாலை வரை உழைத்துக் கால் வயிற்றுக்கும் கஞ்சிக்கின்றிக் கலங்கும் கணமூடிகள் வாழும் இடமும், செயலற்றுச், செய்வதறியாது செத்து மடியும் பிச்சைக்காரர்கள் ஆதரவற்ற அனாதைகள் வாழும் ஊரும் நமதாக இருக்கட்டும். எழுந்திரு, வா போகலாம் என்று பெரியவர் சங்கரனின் கைகளைப் பற்றினார்.

நெஞ்சம் நெகிழ்ந்து நகியோடும் நிலையிற் கலங்கியிருக்கும் சங்கரன்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.

(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

இளமை

அஃதாவது பலவற்றிற்கும் முதற் கருவியாய்ப் பயன்படுதற் குரிய இளமையது திறங் கூறுதல் உலகியலில் நன்கு காத்துக் கொள்ள வேண்டுவது ஈதாகலானும், ஆற்றல் மிக்கதாகலானும், ஆக்கப் பணிகட்குக் கருவியாதலானும், இஃதின்றி மற்றெவை யிருந்தும் பயனின்மையானும் இறுதிக்கண் இது நிறுத்தப்பெற்றது.

1. எங்கெங் குளதிளமை
அங்கங் கெழில் ஊற்றுத்
தங்கும் தழைக்கும் நலன்.

எங்கெங்கே இளமை உள்ளதோ அங்கங்கும் அழகு ஊற்று நிலைகொள்ளும்; அதனால் நன்மை செழிக்கும்.

'இளமை' என்னும் நிலத்தில் 'எழில்' என்னும் நீர் ஊறி நன்மை என்னும் பயிர் தழைத்தல் ஈண்டுக் கூறப்பட்டது. பிள்ளைமையும் மூப்புங் கூடப் பிறவியின் எங்கெங்குள திளமை என்று இடஞ் சேர்த்தார். தங்குமென்றது நாளும் ஊறுமென்னும் பொருட்டு. இளமையும் அழகும் நன்மையும் மனிதப் பிறப்பின் சிறப்புக்கள்; இவை மூன்றும் முறையே பொருளும், இன்பமும், அறமும் உணர்த்தும்; இதனால் இளமையது சிறப்புக் கூறப்பட்டது.

2. இயற்கை எழச்செய்யும்
இன்னிசைக்கே ஏற்ப
இயற்றும் இளமை நடம்.

இயற்கையன்னை எழுவிக்கும் இனியகானத்திற்கேற்ப இளமை நடனஞ் செய்யும்.

இயற்கை நெறிப்படி இளமை இயங்கும் என்பதாம். எழுப்பும் என்னாது எழச் செய்யும் எனப் பிறவினையாற் கூறினார், இசையின் இயலாற்றல் கெடாமைப் பொருட்டு. இளமையின் இயக்கத்தை அதன் நளினங் கருதி நடமென்று உருவகித்தமையின், இயற்கை நெறியை அந் நடத்திற் கேதுவான இசை யென்றார். தாளத்தோடு பொருந்திய இசையொலிக் கேற்பக் கூத்து நிகழுமுண்மை, "பாணியும் தூக்கும் சீருமென்றிவை.....அரிவை காப்ப ....அமர்ந்தனை ஆடி" என்னுங் கலித்தொகையானுந் தெளியப்படும். அருளியக்கத்தின் அடையாளமாகத் தூயமாயை என்னும் விந்துவில் முதன் முதல் நாதந் தோன்றி அதன்பின் ஏனைப் பொருளியக்கங்கள் தோன்றுமென்பது மெய்ந்நூல் உண்மையாகலின் இவ்வாறு கூறினார்.

3. இளமை திருந்த இயல்திருந்
வாழ்க்கைப் புலந்திருந்தும் [தும்
புன்மை அறும்.

இளமை திருத்தம் பெற அதனால் உள்ளத்தின் தன்மை திருந்தும்; வாழ்க்கை நுகர்வு திருந்தும், கீழ்மை நீங்கிப் பெருந்தன்மை ஓங்கும்.

இளமைப் பருவம் திருத்தமாய் நடை பெறுதலால் உள்ளமும் புலன்களும் மேம்பட்டுச் சிறுமை வாழ்க்கை குற்றமின்றி நடந்து பெருமை பெறும் என்பதாம். புலன்களால் நுகர்தலின் நுகர்வு புலமெனப்பட்டது; புலனென்பதும் புலமென்பதும் ஒன்று.

4. முதுமையிற் சேரும்
விளைவெல்லாம் முன்பே
இளமையில் இட்ட பயிர்.

மூப்புக் காலத்தில் திரளும் விளைவு முழுதும் முன்பு இளமைப் பருவத்தில் விதைத்து வளர்த்த பயிரான் விளைவனவே. சேர்தல் ஈண்டுத் திரளுதல் என்னும்பொருட்டு; பயனை விளைவென்றும் இளமைக் காலத்தில் மேற்கொண்டு பழகுஞ் செய்கையை இளமையில் இட்ட பயிரென்றும் உருவகத்தாற் கூறினார். பயிர் நல்லதாயின், விளைவும் நன்றாமாகலின் இளமையிற் றிருந்துதலின் இன்றியமையாமையை இதனாலும் வற்புறுத்தினார். இவை மூன்று பாட்டானும் இளமை திருந்தஒழுகுதலின் இன்றியமையாமை புலப்படுத்தினார்.

5. ஏற்கும் எதிர்ப்பஞ்சா
தேதுறினும் பின் நோக்கா
ஆற்றல் இளமைக் குயிர்.

அரியன செய்தலை ஏற்கும் ஆற்றலும், எதிர்ப்புக்கு அஞ்சாமல் தடை எது நேர்ந்தாலும் முன்னோக்கிச் சேறலன்றிப் பின் நோக்காத ஆற்றலும் இளமைக்கு உயிர் போல்வனவாம்.

ஏற்கும் ஆற்றல் பின்னோக்கா ஆற்றல் என இயைத்துக்கொள்க. ஆற்றல் இரண்டனுள் முன்னது அறிவு வலிமையாகிய துணிவையும் பின்னது மனமொழிமெய் வலிமையாகிய முயற்சியையும் உணர்த்தும். அரியன செய்தற்குப் பிறரானும் ஊழானும் முறையே எதிர்ப்புந் தடையும் நேரக் கூடுமாகலின் 'எதிர்ப்பஞ்சா தேதுறினும்' என அவ்விடையூறுகளை இருவகையாக விதந்தார். ஏற்குந் துணிவோடு இடையூறுகட்குப் பின்

நோக்கா வல்லமையும் வேண்டுமாகலானும், இரண்டும் இளமைக்கே இயலுமாகலானும், அவை இன்றேல் இளமை பயனற்றதாயொழிதலானும் 'இளமைக்கு உயிர்' என்றார்.

6. எண்ணம் பலபூக்க
எங்கும்இசை மணக்க
மன்னும் இளமை யுலகு.

அரியன நிறைவேற்றும் எண்ணங்கள் பல தோன்றி மலர்தலானும் அவற்றால் எங்கும் புகழ் மணம் வீசுதலானும் இளமை என்னும் உலகு பெருமையுறும்.

பல வென்றார் இளைஞருள்ளத்தில் எண்ணங்கள் புதிய புதியவாய்த் தோன்றி நிழலாடுமாதலின். 'பூக்க' என்றதற் கேற்ப 'மணக்க' என்றார். மன்னுதல் ஈண்டுப் பெருமையுறுதல். இளமையுலகமே புதிய எண்ணங்களை எண்ணிப் புகழ் பரக்க அருஞ் செயல்களை ஆற்றி நலம் விளைப்பதாகலின் இவ்வாறு கூறினார்.

7. இளமைக் கிடும்விருந்தாம்
இன்பமோ அன்றன்று
அளவிலா ஆன்ற உழைப்பு.

இளமைப் பருவத்திற்கு இடுகின்ற விருந்து இன்பமோ, அன்று அன்று, அளவில்லாத மிக்க உழைப்பேயாம்.

விருந்தென்றது ஈண்டு நுகர்வென்னும் பொருட்டாகலின் உழைப்பையும் ஒரு நுகர்வாக மேற்கொள்கவென்பதும், இளமைக்குத் தரும் நுகர்வு இன்பமன்று உழைப்பே என்றமையின் அவ்வுழைப்பு கடமையின் பொருட்டல்லது இன்பங் கருதியன்றென்பதுங் கருத்தாயின. முயற்சியினிடையே இன்ப நுகர்வில்எண்ணமிழிந்தால் உழைக்குங் கடமை தவறிச் சிறிதியைந்த அவ்வின்பமும் நிலையாது கெடுமென்பார், 'இன்பமோ அன்'றென்றார். அடுக்கு அதனால் விளையும் இடர்ப்பாடுகளை நினைவு கூர்வித்தது. உழைப்புப் பலவாதலின் 'அளவிலா' என்றும், தக்க உழைப்பெடுக்க வென்பார் 'ஆன்ற' என்றும் விதந்தார். இவை மூன்று பாட்டானும் இளமைக்குச் சிறப்பாவன கூறினார்.

8. நல்லாற்றில் உய்த்த
இளமை நலமுற்றிச்
செல்லாற்றில் சேர்க்கும் திரு

நல் வழியிற் செலுத்தப்பட்ட இளமைப் பருவம் தன்னையுடையானை நன்மை கனிந்து செல்வாக்குத் தருநெறியிற் சேர்க்குஞ் செல்வமாகும்.

நல்லா றென்றது, அற நெறி. அறங்கள் தம் பயன்றரு நிலையில் கனிந்தமையின் 'நலமுற்றி' என்றார். செல்லல், ஈண்டுச் செல்வாக் குறல்; "செல்வர் வாய்ச் சொற் செல்லும்" என்புழிப் போலச் செல்லாறு செல்வாக் குறுத்து நெறி. இந் நெறிக்குக் கருவியாதல் பற்றி நல் இளமையைத் 'திரு' வென விதந்தார். திருவென்பது செல்வம் பயக்கும் பேறாகலினென்க. இதனாற் சிறப்புற நிகழும் இளமையது பயன் கூறப்பட்டது.

9. ஏற்ற திளமைக்கண்
எவ்வுயிரின் தேர்ச்சியும்
போற்றுக ஆற்ற உலகு.

தகுதியுடையதாகிய இளமைப் பருவத்தில் நிகழும் எத்தகைய உயிரின் செயற் சிறப்பையும் உலகம் பெரிது போற்றிக் கொள்வதாக!

செயற் பயிற்சிக்குந் தேர்ச்சிக்கும், இளமைப் பருவமே ஏற்றதாகலின், 'ஏற்ற திளமை' எனவும் நட்டார் பகைவர் அயலாரெனப் பாராது யாவராயினு மவர் செயற் சிறப்பைப் போற்றுக' என்பார் 'எவ்வுயிரின் தேர்ச்சியும்' எனவும், கருத்தூன்றிப் போற்றுக என்பார் 'ஆற்றப் போற்றுக' வெனவுங் கூறினார். செயற் சிறப்புக்கள் உயிராற்றலால் விளைவனவாகலின் பொதுவாக எவ்வுயிரின் தேர்ச்சியுமென உயிர்மேல் வைத்துக் கூறினாரேனும் சிறப்பாக மக்களின் தேர்ச்சியே ஈண்டுக் கருதப்பட்டதென்க. ஆற்றப் போற்றுக வென்றது, அதனால் இளைஞருலகும் ஏனையுலகும் வளர்ச்சியும் நலமுமுறுதலா னென்பது. இளமையுலகுக்கு ஏனையோர் பாராட்டுதல் இன்றியமையாததென்பது இதனால் தெளிவுறுத்தினார்.

10. காக்கக் கடவ திளமை முன்
காத்தளிப்பின்
ஆக்கமும் நோன்பும் அது.

இளமை தகுதியாகப் பாது காத்துக் கொள்ளக் கடவதாகும்; இளங்காலையே காத்துப் போற்றினால் அச் செய்கையே பிறவிக்கு ஆக்கமும் தவமுமாம்.

காக்குங் கடமையுடையதென்பது, காக்கக் கடவ தெனப்பட்டது. காத்தல் தீமைகளுறாமற் காத்தலும் அளித்தல் நன்மைகள் பெய்து போற்றலுமாகலின் 'காத்தளிப்பின்' என விதந்தார். தவமும் தவத்தால் வரும் பயனுமென்றற்கு, நோன்பும் ஆக்கமும் என்றார்; வேறு நோன்பு வேண்டா, இளமை காத்தலே சாலுமென அதற்கு முதன்மையளித்தபடியாம். இளமையைத் தகுதியாகக் காத்தல் ஒரு தவம் என்பது இதனால் விள[illegible]னார்.

ஈரடி இருநூறு முற்[illegible]று.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; ம[illegible]ம். (அஞ்.